தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 20, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2033

2002 மே 3, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு"

உழைப்போர் உள்ளம் வாடாமல் இருக்கும் வரையில் உலகின் செழிப்பும் வாடாமல் இருக்கும். எனவே, உழைப்போர் நிலையை ஒவ்வொரு நாளும் அரசினர் ஆய்ந்து அறிந்து ஆவன செய்ய வேண்டும்.

1. வினாக்கள் - விடைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 275, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

275—

விவசாயத்திற்குத் தண்ணீர்

***4290—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள கொள்ளிடம் ஆற்றின் வழியாக கடலில் கலக்கும் உபரி தண்ணீரைத் தேக்கி ராட்சத என்ஜின் மூலம் விவசாயத்திற்குத் தண்ணீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வினாக்களுக்கான விடை:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியிலுள்ள கொள்ளிடம் ஆற்றின் வழியாக கடலில் கலக்கும் உபரி தண்ணீரைத் தேக்கி ராட்சத என்ஜின் மூலம் விவசாயத்திற்குத் தண்ணீர் வழங்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதியானது பெரும்பாலும் விவசாயத்தையே நம்பியுள்ள தொகுதியாகும். சீர்காழி தொகுதியில் குறைந்தது 50 ஆயிரம் ஏக்கர் சாகுபடி நிலம் உள்ளது. அந்த நிலமானது 3 போகமும் விளையக்கூடிய நிலமாகும். எனது சீர்காழி தொகுதியில் ஓடுகின்ற கொள்ளிடம் ஆறானது, சீர்காழியிலிருந்து 6 கிலோமீட்டர் தொலைவில் கடலில் போய்ச் சேருகிறது. குறிப்பாக, சீர்காழி தொகுதியிலுள்ள கொள்ளிடம் ஆற்றில் தினசரி சுமார் 500 கன அடி உபரி நீர், கடலில் கலந்து வீணாகிறது. எதற்கும் பயன்படாமல் இப்படி வீணாகும் நீரை பனங்காட்டான்குடி என்ற ஊரின் அருகே கொள்ளிடம் ஆற்றில் ஒரு Bed Dam கட்டி, அதன்மூலம் நீரைத் தேக்கி வைத்து ராட்சத என்ஜின் மூலம் இறைத்துக் கொடுத்தால் கடைமடைப் பகுதியான எனது சீர்காழி தொகுதியில் குறுவை, சம்பா, குள்ளகார் போன்ற நெல்லை 3 போகமும் சாகுபடி செய்து விவசாயிகள் பயனடைவார்கள். எனவே, கொள்ளிடம் ஆற்றில் Bed Dam கட்டி, ராட்சத என்ஜின் மூலம் தண்ணீரை இறைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் கொள்ளிடம் ஆற்றின் கீழ் அணை, மைல் 67/2-ன்கீழ் பாசனநீர்ப் பங்கீடு, முறையில்லாமல் முழுவதுமாக வடிகாலாகப் பயன்பட்டு வருகிறது. வெள்ளக் காலங்களில் மட்டும் உபரியாக வரும் வெள்ளநீர், கொள்ளிடம் ஆற்றில் திறந்து விடப்பட்டு கடலில் கலக்க வகை செய்யப்பட்டுள்ளது. விவசாய மேம்பாட்டிற்காக தமிழக அரசின் துரித ஆழ்குழாய்த் திட்டத்தின்கீழ் கொள்ளிடம் வடிகால் ஆற்றின் இரு கரைகளின் அருகில், பல ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் நிலத்தடி நீர் எடுக்கப்பட்டு விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், ஆற்றின் இரு

2002 மே 3]

பக்கங்களிலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, நாகப்பட்டினம் மாவட்டத்தில் பல கிராமங்களில் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, ஊற்று நீரில் உபரி நீர் கிடைக்கும் வாய்ப்பு மிகக் குறைவாகும். வெள்ளக் காலங்களில் வரும் வெள்ள நீரைத் தேக்கிப் பயன்படுத்த சாத்தியமும், நீர்த் தேவையும் இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைநீர் சேகரிப்பதற்காக பல திட்டங்களை இப்போது அரசாங்கம் உருவாக்கி வருகிறது. ஆனால், ஏற்கெனவே இயற்கையாகக் கிடைக்கக்கூடிய தண்ணீரைக் கொள்ளிடம் ஆற்றின் வழியாக கடலில் கலந்து வீணாகப் போவதைத் தடுப்பதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டுமேயொழிய, அதற்குப் பதிலாக அதிக ஆழ்குழாய்க் கிணறுகளை எல்லாம் நீங்கள் போட்டால்கூட, பூமிக்கு அடியில் இருக்கக்கூடிய நிலத்தடி நீரை நாம் உறிஞ்சி மீண்டும் விவசாயத்திற்குப் பயன்படுத்தினால் பிரச்சினைதான் உருவாகுமேயொழிய, உபரியாக இருக்கக்கூடிய அந்தத் தண்ணீரைத் தேக்கி வைத்தால்தான் நம்முடைய நாட்டிற்கு, விவசாயத்திற்கு அது பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின்கீழ், ஹட்கோ. World Bank என்று பல துறைகளிலேயிருந்து நிறைய பணம் இப்போது உங்களுக்குக் கிடைக்கிறது. அதிலே கடனைப் பெற்று எப்படியாவது அந்த இடத்திலே ஒரு Bed Dam கட்டி தண்ணீரைச் சேர்த்து விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா? ஏனென்றால், தண்ணீர், இப்போது உங்களுக்கு. .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியோடு முடியுங்கள்; மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம் ஆற்றின் கீழ் அணையின்கீழ், வெள்ளக் காலங்களில்தான் உபரியாக வருகின்ற நீரை, கீழ்ப் பகுதிக்குத் திருப்பி விடுவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. அதில் வருகின்ற உபரி நீர் ஊற்றுநீர். ஊற்று நீரில் உபரி நீர் கிடைக்க வாய்ப்பு மிகக் குறைவாகவே

உள்ளது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. உபரி நீர், மிகுதியாக அந்தப் பகுதிகளில் வருகின்றதா என்ற சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து ஆய்வு செய்யப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 276, திரு. வெ. கோவிந்தராஜ், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

276—

தடுப்பணை கட்டுதல்

***6495—திரு. வெ. கோவிந்தராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதி, பெரிய மணவாரணப்பள்ளி ஊராட்சி, கங்கமடுகு கிராமத்தின் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி பாசன வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாக்களுக்குண்டான விடை:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதி, பெரிய மணவாரணப்பள்ளி ஊராட்சி, கங்கமடுகு கிராமத்தின் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி பாசன வசதி செய்யும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. கோவிந்தராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலைப் பெருக்க, நீராதாரத்தைப் பெருக்க, குட்டைகளையும், ஏரிகளையும் ஆழப்படுத்தி தடுப்பணைகளைக் கட்ட உத்தரவிட்ட அம்மா அவர்களுடைய அரசுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கிருஷ்ணகிரி தொகுதியிலுள்ள வேப்பனப்பள்ளி ஒன்றியத்திலே, பெரிய மணவாரணப்பள்ளி

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS